தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **CP.No.** | **:** | 178/2021,179/2021 மற்றும் 2/2022 | சாட்சியம் | **:** | **RW1** |
| **Name** | **:** | திரு.கண்ணன் | | | |
| **Date** | **:** | **25.05.2026** | | | |
| **Time** | **:** | **11.19 a.m to 11.35 a.m** | | | |

எ.த.சா.1.கண்ணன் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை

நான் முதல் எதிர்மனுதாரருக்காக சாட்சியம் அளிக்கிறேனா அல்லது இரண்டாவது எதிர்மனுதாரருக்காக சாட்சியம் அளிக்கிறேனா என்றால் இரண்டாவது எதிர்மனுதாரருக்காக சாட்சியம் அளிக்கிறேன். நான் இரண்டாவது எதிர்மனுதாரர் அலுவலகத்தில் BDO ஆக இருக்கிறேன். மனுதாரர் பணி கொடை கேட்டு மனு தாக்கல் செய்திருக்கிறார். குறைந்தபட்ச ஊதியத்தை விட குறைந்த ஊதியம் கொடுத்த காரணத்தினால் அதனை கேட்டு மனுதாரர் மனு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் ஆமாம். ம.சா.ஆ.1 அரசாணை முன்னிலைக்கு தான் அவர்கள் குறைந்தபட்ச ஊதியம் கேட்கிறார்கள் என்றால் ஆமாம். ஆனால் அந்த அரசாணையானது நிரந்தர தொழிலாளர்களுக்கு தான் பொருந்தும். அந்த

அரசாணையானது Local Authority-க்கும் பொருந்தும் என கண்டுள்ளது என்றால் ஆமாம். அதே அரசாணையில் மேல்நிலை நீர் தொட்டி பணியாளர்களும் அடங்குவார்கள் என கண்டுள்ளது என்றால் ஆமாம். Pump Operator-களும் அந்த பட்டியலில் உள்ளார்கள் என்றால் ஆமாம். 2010 க்கு முன்னர் மாவட்ட ஆட்சியர் தான் பஞ்சாயத்து சம்பந்தப்பட்ட ஊழியர்களின் பணி நியமனம் மற்றும் ஊதிய நிர்ணயம் செய்து வந்தார்கள் என்றால் ஆமாம். அரசாணையில் பஞ்சப்படி வழங்க வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். ம**.**சா**.**ஆ**.6** ஆவணத்தில் மாவட்ட ஆட்சியர் இரவு பணி மேற்கொள்ளும் ஆப்பரேட்டர்களுக்கு டார்ச் லைட் வழங்க வேண்டும் என அறிவுரை வழங்கியுள்ளார் என்றால் ஆமாம். மனுதாரர் ஒரு நாளைக்கு காலை,மதியம், இரவு என மூன்று நேரம் பம்ப் ஆப்ரேட் செய்வார் என்றால் ஆமாம். வருடத்தில் 365 நாளும் மனுதாரருக்கு வேலை இருக்கும் என்றால் ஆமாம். பண்டிகை நாட்கள், அரசு பொது விடுமுறை நாட்களிலும் கூட அவர்களுக்கு விடுமுறை இல்லை என்றால் ஆமாம். ஆப்ரேட்டர்கள் விடுப்பு எடுக்கும் நாட்களில் மாற்று ஏற்பாடு செய்யப்படும் என்றால் ஆமாம். குடிநீர் விநியோகம் அத்தியாவசிய பணி என்றால் ஆமாம். ம**.**சா**.**ஆ**.13** மாநகராட்சி நிர்வாக அதிகாரி அனைத்து ஊழியர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியம் அடிப்படையில் ஊதியம் வழங்க வேண்டும் என அறிவுரை வழங்கி உள்ளார் என்றால் ஆமாம். அது மாநகராட்சி மற்றும்

நகராட்சிக்கு தான் பொருந்தும் எங்களுடைய அலுவலகமானது உள்ளாட்சியை சேர்ந்தது ஆகும். மனுதாரர் முழு நேர பணியாளர் என்றால் சரியல்ல. தொகுப்பூதிய பணியாளர் ஆவார். மனுதாரருக்கு விடுமுறை இல்லை என்றால் ஆமாம். மனுதாரர் தொகுப்பூதிய ஊழியர் இல்லை என்ற காரணத்தினால் அவருக்கு குறைந்தபட்ச ஊதிய சட்டம் பொருந்தும் என்றால் சரியல்ல. மனுப்படி உத்தரவாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by her to be correct.
Sd/-Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:25.05.2026.